தாமான் துன் அமீனா தமிழ்ப்பள்ளி
ஆண்டு 3

<u>படத்தைக் கொண்டு கதையை முழுமைப்படுத்துக.</u>



திருநாவுக்கரசர் மீது அதிகமான பற்று கொண்டவர் அப்பூதியடிகள். எல்லாப் பொருளுக்கும் திருநாவுக்கரசர் என்றே பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

திருநாவுக்கரசர் ஒருநாள் அப்பூதி அடிகளின் இல்லத்திற்கு வந்தார். அப்பூதியடிகள் பெரும் மகிழ்ச்சியுடன் அவரை ______________. திருநாவுக்கரசரை தன் வீட்டில் அமுதுண்டு செல்லுமாறு வேண்டினார்.

அப்பூதியடிகளின் மனைவி ______________ உணவைச் சமைத்தார். தன் மகனை அழைத்து," மகனே, தோட்டத்திற்குச் சென்று வாழை இலை ஒன்றனை ______________ வருவாயா ?" எனக் கேட்டார். உடனே," அப்படியே செய்கிறேன் அன்னையே ! இன்று நான் ஐயா

LIVEWORKSHEETS

திருநாவுக்கரசருடன் சேர்ந்து உணவு உண்ண போகிறேன் தந்தையே!" என மகிழ்ச்சியுடன் கூறி தோட்டத்திற்குச் சென்றான்.

உணவு பரிமாற இலை கொண்டுவரச் சென்ற அப்பூதியடிகளின் மகன் ____________ தீண்டி இறந்தான். அப்பூதி அடிகளும் அவரது மனைவியும் சிவனடியாரின் திருவமுதுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என எண்ணி தன் மகனின் உடலை ______________ வைத்தனர். அப்பரை உணவு உண்ண அழைத்தனர்.

திருநாவுக்கரசர் அப்பூதியடிகளையும் அவரது மகனையும் _________________ உணவு உண்ணச் சொன்னார். அப்பூதியடிகள் வேறு வழி இன்றி உண்மையைக் கூறினார். அப்பூதியடிகளின் அன்பில் மனமுருகிய திருநாவுக்கரசர் _____________________ பாடி அப்பூதியடிகளின் மகனை உயிர் பெற்று எழச் செய்தார்.

பாம்பு | அறுசுவை | தம்முடன் | அரிந்து

மறைத்து | திருப்பதிகம் | வரவேற்றார்

LIVEWORKSHEETS